IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O. S. No. 352/2019

சாட்சி : PW1

பெயர் : சீனிவாசன் தேதி: 18-11-2024

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வா.த.சா.ஆ- A1 வரிசை பட்டாக்களில் என்னுடைய தாத்தா பழனிசாமி, அவருடைய சகோதரர் தங்கமுத்து ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். என்னுடைய தாத்தா பழனிசாமிக்கு பாத்தியப்பட்ட பாதி சொத்துக்களை பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மீதி பாதி சொத்து அவருடைய சகோதரர் தங்கமுத்துவுக்கு பாத்தியப்பட்டது. அந்த சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யவில்லை. காளியண்ண கவுண்டருக்கு சொத்து பாத்தியப்பட்டது என்பது சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. யுடிஆர் பட்டா தாக்கல் செய்துள்ளேன். அந்த யுடிஆர் பட்டா தாக்கல் செய்யவில்லை என்று சாட்சி கூறுகிறார். என் தாத்தா பழனிசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 7ம் பிரதிவாதிக்கு வா.த.சா.ஆ-A11 கிரய ஆவணம் மூலம் கிரயம் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எனவே என் தாத்தா பழனிசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பாக்கி ஏதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. காட்டுவேப்பிலைபட்டியில் என் தாத்தாவிற்கு சொத்து உள்ளது. அந்த காட்டுவேப்பிலைபட்டி சொத்து இந்த தாவா சொத்தில் காட்டப்படவில்லை என்று சொன்னால் ஆமாம். காட்டுவேப்பிலைபட்டி சொத்தை 29.05.2007 வா.த.சா.ஆ-A13 ன் படி ரூ. 10,00,000/- பெற்றுக்கொண்டு நானும், என் குடும்பத்தாரும் விடுதலை பத்திரம்

என் தாத்தா பழனிசாமிக்கு எழுதிக் கொடுத்தோம் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ–A11 கிரய உடன்படிக்கை ஏற்படுத்திய பிறகு உரிய காலவரையறைக்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எனவே காலவரையறை சட்டத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவா சொத்தில் பாகம் கேட்க எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. 7ம் பிரதிவாதி தான் கிரயம் பெற்ற தேதியிலிருந்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

ஓம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.